செ.வெ.எண்: 514 நாள்: 15.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**தபால் நிலையங்களில் 10 வயதிற்கு குறைவான**
**பெண் குழந்தைகளின் பெயரில் செல்வ மகள் சேமிப்பு கணக்கு தொடங்கி பயன்பெறலாம்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் தபால் நிலையங்களில் 10 வயதிற்கு குறைவான பெண் குழந்தைகளின் எதிர் காலத்திற்காக செல்வ மகள் சேமிப்பு கணக்கு தொடங்கி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

புதிதாக பிறந்த அல்லது 10 வயதிற்குட்பட்ட பெண் குழந்தையின் பெற்றோர் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கான பொருளாதார உத்தரவாதத்தை அளிப்பதற்காக, தபால் நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட செல்வ மகள் சேமிப்புத் திட்டம் (சுகன்யா சம்ரிதி யோஜனா) திட்டத்தின்கீழ், குறைந்தபட்சம் ரூ.250 செலுத்தி பெண் குழந்தைகளின் பெயரில் கணக்கு துவங்கலாம். கூடுதல் வைப்புத் தொகை ரூ.50 மடங்காக இருக்கலாம்.

நிதியாண்டு ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.250, அதிகபட்சம் ரூ.1,50,000 வைப்புத் தொகை செலுத்தலாம்.

கணக்கு துவங்கிய ஆண்டிலிருந்து 15 ஆண்டுகள் வரை வைப்புத் தொகை செலுத்த வேண்டும். பின் 6 வருடங்கள் சேர்த்து மொத்தம் 21 ஆண்டுகளுக்கு பின் வட்டி சேர்க்கப்பட்டு முதிர்வுத் தொகை திரும்ப அளிக்கப்படுகிறது.

பெண் குழந்தையின் உயர் கல்விக்காக வைப்புத் தொகையாக செலுத்தியதிலிருந்து 50 சதவீதம் திரும்ப பெறலாம்.

அந்த பெண் குழந்தையின் 21 வயது நிறைவடையும்போது அல்லது அந்த பெண்ணின் திருமண சமயம் இதில் எது முந்தையதோ அந்த சமயத்தில் வைப்புத் தொகை முதிர்வு பெறும்.

இதில் சேமிப்பு செய்யப்படும் தொகை, வட்டி, முதிர்வுத் தொகை அனைத்தும் வரிவிலக்கிற்கு உட்பட்டது. அதிகபட்சமாக ஒரு குடும்பத்திற்கு 2 பெண் குழந்தைகள் இத்திட்டத்தில் பயன்பெறலாம். சேமிக்கும் தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 7.6 சதவீதம் வட்டி விகிதம் அளிக்கப்படுகிறது.

எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் எதிர் காலத்திற்காக செல்வ மகள் சேமிப்பு கணக்கில் சேர்ந்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**